2011 ஜனவரி 12]

24—

பேருந்து வசதி

***123291—டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்பாக்கம்–மருவத்தூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடை. கல்பாக்கத்திலிருந்து மருவத்தூர் வழியாக திருவண்ணாமலைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் மூலம் ஒரு பேருந்து 2010 மே மாதம் முதல் 4 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. கல்பாக்கத்திலிருந்து மருவத்தூருக்கு பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு அதிகரிக்கும்பட்சத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பதிலுக்கு நன்றி. இது முன்பே கேட்கப்பட்ட கேள்வி. ஆனால் பேரவைக்கு கேள்வி இப்போது தான் வந்துள்ளது. இந்த ஆண்டு மே மாதம் முதல்தான் பேருந்து இயக்கப்பட்டது. அதேபோன்று, மதுராந்தகம், சித்தாமூர் பகுதிகளில் காலை, மாலை நேரங்களில் பேருந்துகள் மிகவும் குறைந்த அளவில் ஓடுகிற காரணத்தினாலும் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கும் காரணத்தினாலும் அந்த நேரங்களில் பொது மக்களும் சரி, மாணவர்களும் சரி, பேருந்து மேல் அமர்ந்துதான் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் மதுராந்தகம், சித்தாமூருக்குப் புதிதாக cut service–கள் விட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்கள் தங்கள்

[2011 ஜனவரி 12

பகுதிகளிலே peak hours என்று சொல்லப்படுகின்ற காலை நேரங்களில் பேருந்துகளிலே பள்ளி மாணவர்களின் அடர்வு அதிகமாக இருக்கிறது; அதிகமான நடைகள் விட வேண்டும் என்று ஒவ்வொரு இடத்திலுமே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது பரிட்சார்த்தமாக சென்னை மாநகரில் மாணவர்களுக்கென்று தனியாக 50 பேருந்துகள் விடப்பட்டு அது நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இப்போது பள்ளி நேரங்களில் சென்னை மாநகரில் எந்தெந்தப் பகுதிகளிலே பள்ளிகள் அதிகமாக இருக்கின்றன, எந்தப் பகுதிகளிலிருந்து மாணவர்கள் வருகிறார்கள் என்று கணக்கெடுத்து, அந்த நேரங்களிலே பள்ளி மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் தனியாக பேருந்துகள் விடப்படுகின்றன.

அதேபோல் ஒவ்வொரு பகுதியிலும் பேருந்துகளை அதிக அ..ரவில் இயக்க முடியுமா; அப்படி இயக்கினால் வருவாய் சரியாக வருமா என்று கணக்கெடுத்து ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். தற்போது வருகின்ற ஜனவரி 30-க்குள் அல்லது பிப்ரவரி 15-ஆம் தேதிக்குள்ளாக அனைத்துப் பகுதிகளுக்கும் இந்தப் புதிய பேருந்துகள் வந்துவிடும். அப்படி வருகின்றபோது இன்னும் கூடுதலாகப் பேருந்துகள் விடுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும். சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளுக்குப் பேருந்துகள் விட வேண்டும் என்று குறிப்பிட்டு எழுதிக் கொடுத்தால், அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்பாக்கம்-செய்யூர், செய்யூர்-மரக்காணம், கல்பாக்கம்-மகாபலிபுரம் ஆகிய இடங்களுக்கு, அங்கு வசிக்கின்ற மீனவர்களும், பொதுமக்களும் பயன்பெறும் வகையில் டவுன் பஸ் சர்வீஸ்களை இயக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 12]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளுக்குப் பேருந்துகள் வேண்டும் என்று குறிப்பிட்டு எழுதித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன்.

திரு. சுப. மதியரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கையிலிருந்து தாயமங்கலம், சூராணம், கல்லடிதிடல், சேத்திடல் வழியாக ஆர்.எஸ்.மங்கலத்திற்கு ஒரு பேருந்தும், இளையான்குடியிலிருந்து சென்னைக்கு ஒரு குளிரூட்டப்பட்ட பேருந்தும் இயக்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதைப்போல், நம்முடைய மாண்புமிகு குடிசைமாற்றுத் துறை அமைச்சர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளுக்குப் பேருந்துகள் வேண்டும் என்று கேட்டு, அந்தப் பகுதிகளையெல்லாம் சேர்த்து முழுமையான விவரங்களைக் குறிப்பிட்டு, அவர்களுக்குப் புதிய பேருந்துகள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 60 புதிய பேருந்துகள் ஒதுக்கித்தரப்பட்டுள்ளன. இன்னும் கூடுதலாகப் பேருந்துகள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எனவே, இதையும், இங்கு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளதையும் கவனத்தில்கொண்டு அந்தப் பகுதிகளுக்கு விரைவில் பேருந்துகள் விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று முன்தினம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட என்னிடத்தில் இதுபற்றி சொல்லியிருக்கிறார்கள். விரைவில் அவர்களுக்கு அந்தப் பேருந்துகள் விடுவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2011 ஜனவரி 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்காலத்தில் திருவள்ளூரிலிருந்து ஏகாத்தூர் மற்றும் கடம்பத்தூர் வழியாக பேரம்பாக்கம் வரை இயக்கப்பட்ட அரசுப் பேருந்து தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அந்தப் பேருந்தினை மீண்டும் இயக்குவதற்கும், திருவள்ளூரிலிருந்து திருவாலங்காடு மற்றும் அரக்கோணம் செல்வதற்குப் போதுமான பேருந்துகள் இல்லாததால் அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலையில், அப்பகுதியில் போதுமான பேருந்துகளை இயக்குவதற்கும், திருத்தணியிலிருந்து திருவள்ளூருக்குச் செல்லும் பேருந்துகள் கனகம்மாச்சத்திரம் பேருந்து நிலையத்தில் மட்டுமல்லாது மற்ற பேருந்து நிறுத்தங்களிலும் காலை, மாலை வேளைகளில் பள்ளி மாணவ, மாணவிகள் பேருந்து நிறுத்தத்தில் நிற்கும்போது, பேருந்துகள் நிற்காமல் செல்கின்ற நிலைமைக்கு அரசு முற்றுப்புள்ளி வைத்து நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஆட்சிக்காலத்தில் விடப்பட்ட பேருந்துகள் என்ன காரணத்தினால் நிறுத்தப்பட்டுள்ளன என்பது தெரியவில்லை. அதனை அறிந்து, அந்த மக்களுக்கு அந்தப் பேருந்துகள் தேவைப்படுமானால் நிச்சயமாக மீண்டும் அந்தப் பேருந்துகள் விரைவிலேயே இயக்கித் தரப்படும். அதேநேரத்தில் பள்ளி மாணவர்கள் நிற்கின்ற இடத்தில் பேருந்துகள் நிற்காமல் போகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, நகரப் பேருந்துகளில் மட்டும்தான் அந்தப் பள்ளி மாணவ, மாணவிகளை ஏற்றிச் செல்கின்ற அந்தச் சட்டம் இருக்கின்றது. புறநகர்ப் பகுதிகளில் இதுபோல் பள்ளி மாணவ, மாணவிகளை ஏற்றிச் செல்வதில்லை. நகரப் பேருந்து இல்லாத பகுதிகளில் மட்டும் அந்த வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இருந்தும், இன்னும் அதிகமான பேருந்துகள் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, திருவள்ளூர் மாவட்டத்தில் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவாஜி அவர்களும், மற்றவர்களும் பேருந்துகள் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) இப்படி

2011 ஜனவரி 12]

கையை, கையை காட்டினீர்கள் என்றால் எப்படி? நான் பதில் சொன்னால் கோபித்துக்கொள்கிறீர்கள். நான் ஒழுங்காக பதில் சொன்னால் கோபித்துக்கொள்கிறீர்கள். (குறுக்கீடு) இப்படி, இப்படி என்றால் எப்படி? உங்களுக்கு பஸ் வேண்டும் என்று என்றைக்காவது எழுதிக் கொடுத்திருக்கிறீர்களா? எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பதைக் கருத்தில்கொண்டு, நிச்சயமாக அவர்கள் கேட்கின்ற பகுதிகளுக்கு பேருந்துகள் விடப்படும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய Transport Act-க்கு ஏற்கெனவே 2008 ஆம் ஆண்டு மத்திய அரசிலே திருத்தம் கொண்டுவரப்பட்டு, மாற்றுத் திறனாளிகள் மோட்டார் சைக்கிள், கார் போன்ற வாகனங்களை ஓட்டுவதற்கு உரிமம் வழங்கப்படுவதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், தமிழகத்தில் இதுவரை மாற்றுத் திறனாளிகள் யாருக்குமே இன்னும் உரிமம் வழங்கப்படாமல் இருக்கிறது. எனவே, இதற்கு ஒரு குழு போடவேண்டும் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மாற்றுத் திறனாளிகள் அவர்களாகவே காரை ஓட்டிக்கொள்வதற்கும், அவர்களாகவே இரு சக்கர மோட்டார் வாகனங்கள் ஓட்டிக்கொள்வதற்கும் உரிமம் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத்திறனாளிகளுக்கென அங்கீகரிக்கப்பட்ட பணிமனைகள்மூலம் வடிவமைக்கப்பட்ட வாகனங்களை— specifically designed vehicles—மாற்றுத்திறனாளிகள் உபயோகிக்கும்பட்சத்தில் அவர்களுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்க தற்போது ஆணை உள்ளது. அவர்களுக்கு 100 சதவிகிதம், சாலை வரியிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. இப்போதே லைசன்ஸ் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

[2011 ஜனவரி 12

முற்பகல் 10–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளுக்கான அந்த ஓட்டுநர் உரிமம் பற்றிதான் நான் பேசுவதாக இருந்தேன். அதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் கேட்டுவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாற்றுத் திறனாளிகளுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்கும்போது, பூனாவிலே நம்முடைய மத்திய அரசினுடைய பயிற்சிக் கல்லூரி இருக்கிறது; அவர்கள் வாகனங்களைப் பார்வையிட்டு, அவர்களிடம் No obiection certificate வாங்கியபின்புதான், அவர்கள் வடிவமைத்த வாகனங்களைத்தான் ஓட்டுவதற்கு உரிமம் வழங்கப்படும் முறை இப்போது இருப்பதாக வட்டாரப் போக்குவரத்து அலுவலக அதிகாரிகள் கூறுகின்றார்கள். ஆகவே, அதை மறுபரிசிலனை செய்து ஏற்கெனவே நாம் வழங்கியதைப் போன்று, மாவட்ட வட்டாரப் போக்குவரத்துக் கழக அலுவலகத்திலேயே அந்த ஓட்டுநர் உரிமத்தை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: ஏற்கெனவே அதுதான் சொல்லப்பட்டு இருக்கிறது. அதற்கென்று இருக்கின்ற, அங்கீகரிக்கப்பட்ட பணிமனைகளின்மூலம் வடிவமைக்கப்பட்ட வண்டிகளுக்கு உரிமம் வழங்குவதற்கு ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, மத்திய அரசு சட்டத்தின்கீழ், எந்த மாதிரி வாகனங்கள் இருக்க வேண்டும், அந்த டிசைன் எப்படி இருக்கவேண்டும் என்று அவர்கள் நிர்ணயித்துக் கொடுப்பார்களேயானால், அவற்றை அங்கீகரித்து அவர்க்ளுக்கெல்லாம் R.T.O. அலுவலகத்திலேயே லைசன்ஸ் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

2011 ஜனவரி 12]

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சொந்த கிராமமான வீரசோழபுரம் கிராமத்திற்கு கொடுங்கால் வழியாக, விழுப்புரம்–வீரசோழபுரம் வழியாக ஒரு டவுன் பஸ் விடவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பல முறை கேட்டிருக்கின்றேன். கேட்டதை எல்லாம் கொடுத்துக்கொண்டிருக்கிறார். இதையும் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, திருக்கோவிலூர்–மேலந்தூர் வரையிலும், திருக்கோவிலூர்–முகையூர் வரையிலும், திருக்கோவிலூர்–திருவெண்ணெய் நல்லூர் வரையிலும், திருக்கோவிலூர்–தியாகதுருகம் வரையிலும், திருக்கோவிலூர்–இளவரசன்கோட்டை வரையிலும் பள்ளி நேரங்களில் கூடுதல் பேருந்து வசதி செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும். பள்ளி மாணவர்கள் செல்வதற்கு சிரமமாக இருக்கிறது. எனவே, அந்த நேரங்களில் கூடுதலாகப் பேருந்து வசதி செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே பார்த்து என்னிடம் நேரடியாகவே அதைச் சொல்லியிருக்கிறார்கள். விரைவிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதிகளுக்கு நகரப் பேருந்தும், பள்ளி நேரங்களிலே மாணவர்கள் செல்வதற்கு வசதியாகக் கூடுதல் பேருந்துகளும் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது உடனடியாகச் செய்வதற்கு இயலாத நிலையில் நாங்கள் இருந்துகொண்டிருக்கிறோம். காரணம் இந்த ஆண்டு வாங்குவதற்கு முடிவுசெய்யப்பட்ட 3,000 புதிய பேருந்துகளில் இதுவரையில் 700 பேருந்துகளின் கட்டுமானப் பணிதான் முடிந்து மக்கள் பயன்பாட்டிற்கு வந்து இருக்கின்றன. புதிய பேருந்துகள் வருகின்றபோது அதிகரித்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை

[2011 ஜனவரி 12

அமைச்சர் அவர்கள் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குச் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என்ற ஒரு நல்ல செய்தியை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அது சென்னை மாநகரத்தில் மட்டும் என்றில்லாமல், மற்ற மாநகரம் மற்றும் முக்கிய நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா? குறிப்பாக, திருப்பூர் பகுதிக்கும் பள்ளி மாணவர்களுக்கு அதுபோன்ற சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுமா என்று கேட்பதோடு, திருப்பூர், இலட்சக்கணக்கான பேர், பெண்களும், ஆண்களும் இணைந்து பணியாற்றுகிற ஒரு நகரம் என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, மாணவர்களுக்கு இயக்கப்படுவதைப்போலவே பெண்களுக்கென்று சில சிறப்புப் பேருந்துகளை, முக்கிய வழித் தடங்களில் இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, திருப்பூர் நகரத்தில் இந்த நான்கரை ஆண்டுகளில் மட்டும் 200-க்கும் மேற்பட்ட புதிய வழித் தடங்களில் பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் திருப்பூர் நகரத்திற்குப் பேருந்துகள் சென்று கொண்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் அதனை தனி கோட்டமாக மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டு, கோட்டமும் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே பெண்களுக்கென்று தனியாக பேருந்து வேண்டும் என்று சொன்னால் நிச்சயமாக அதைப் பரிசீலிக்கலாம். அதில் ஒன்றும் தவறில்லை. ஆனால், புதிய பேருந்துகள் வருகின்றபோது அவர்களுக்கென்று தனியாக பேருந்துகள் ஒதுக்கி விடப்படலாம். அதில் பிரச்சினை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.